ஜநவிநோதிநி.

இல. 3.] மார்ச்சுமீ 1877. [புஸ்த. VIII.

இஸ்பெஹான் நகரத்துச் சமீபக்காட்சி.

முற்காலத்தில் இவ்வாசியாகண்டத்தில் மாட்சிமைதங்கி விளங்கிய பல நாடுகளில் பாரவீகம் அல்லது பெர்ஷியாதேசமும் ஒன்று. பாரவீகதேசம் சாதாரணமாய் மேட்டுத்தாக்குகளும், குன்றுகளும், மலைகளும், மணல்வெளிகளும், பாலைவனங்களுமாய் நிறைந்து அநேகவிடங்களில் பயன்படாமலிருந்தபோதிலும், அதில் நீர்வளமும் நிலவளமும் பெற்றுச் செழித்த சில தாக்குகளுமுண்டு. முன் பாரவீகதேசத்திற்குப் பிரதான நகரமாயிருந்த இஸ்பெஹான் பட்டணத்தையடுத்த பிரதேசங்களுக்குச் சமானமாய் அழகும் செழிப்புமுள்ள தேசம் வேறெங்குமில்லை. முதல்முதல் கொஞ்சந்தூரத்திலிருந்து பார்க்கும்போது சாலைகளும் சோலைகளும் தோப்புகளும் தோட்டங்களுமாய் அதன் காட்சி வெகு மேம்பட்டிருக்கும். முன் ஒருகால் அந்தப் பட்டணம் அத்தேசத்திற்குப் பிரதானநகரமாய் இருந்ததென்பதற்கு அடையாளமான இடிந்த கிலமாய்ப்போன கட்டடங்களெல்லாம் சோலைகளால் மறைபட்டு, தூரத்திலிருந்து பார்ப்பவர்கண்ணுக்குத் தென்படமாட்டா. அந்தப் பட்டணத்திற்குச் சமீபமாய்ப் போகப்போக இந்தக் காட்சி மாறி உள்ளது உள்ளபடியே தோன்றும்.

அதன் அரண்மனைமுதலிய பழைய கட்டடங்களெல்லாம் கிலமாயிருந்தபோதிலும், அவைகளின் அழகும் மேன்மையும் அழிந்துபோகவில்லை. பருத்த வெள்ளிக்கதவுகள் நாட்டிய வித்

தியாசாலைகளும், அழகான பெரிய பாலங்களும், பலவித காரா ஞ்சிகளும், வளைவுவைத்து விநோதமாய்க் கட்டிய கடைத்தெருவு களும், ஸ்நானகட்டடங்களும் படித்துறைகளும் அமைத்திருக்கிற சீர்மையை இவ்வளவென்று நாம் சொல்லமுடியாது. ஜிண்டைரூட் என்கிற நதி அங்கே மிகவும் பேர்பெற்றது. அவ்வாற்றின் இருகரையிலும் செழித்தோங்கிய மரங்களடர்ந்த தோப்புகளால் தரையில் சூரியகிரணமென்பதே தோன்றாமல் எங்கும் எரிந்துபோகிற கோடைகாலத்திலும் அவ்விடமெல்லாம் மேகமண்டலம்போல் இருண்டு குளிர்ந்திருக்கும். அவ்விடமெல்லாம் ஸமசீதோஷ்ண பூமியில் உண்டாகிற பலவித மலர்களும் மலர்ந்து குமுகுமு வென்று மணக்கவும், பழங்கள்பழுத்துக் குலுங்கவும் மிகவும் மநோகரமாயிருக்கும். அப்படிப்பட்ட இஸ்பெஹான் பட்டணத்தின் சமீபக்காட்சியை இத்தேசத்தார் ஒருவாறு கண்டு களிக்கும்படி அக்காட்சிப்படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்து அனுப்பியிருக்கிறோம்.

இஸ்பெஹான்நகரத்தில் ஏறக்குறைய இரண்டுலக்ஷம் குடிகளுண்டு. இவர்கள் விவேகமும் சுருசுருப்பும் உள்ளவர்கள். அவர்களுடைய குடியிருப்பும் உடையும் உண்வும் சிறந்தவைகளல்ல. அத்தேசத்தாருக்கெல்லாம் தமக்கு அவசியமான காரியங்களிலேதான் நோக்கம் அதிகம். அவர்கள் வியவஹாரவிஷயங்களிலே வெகு தைரியமாய்ப் பேசுவார்கள். அவர்கள் எப்போதும் சிரிப்பும் சந்தோஷமுமாயிருப்பவர்களென்றே காணப்படுகிறது. ஆடுகள், பாலாடைக்கட்டி, உரொட்டி இவைதாம் அவர்களுக்கு முதன்மையான உணவு. சிறுகிராமங்களில் வேளாண்மைசெய்கிற குடிகளுக்கு மாமிசபோஜனம் கிடைப்பதரிது. அவ்விடத்து ஜனங்களுக்கு வெகுவாய்க் கல்விப்பயிற்சியே கிடையாது.

பிரதான நகரங்களில் வாசஞ்செய்கிற ஜனங்களுடைய நடையுடைபாவனைகள் இத்தன்மையானவையல்ல. அவர்கள் சிறந்த ஆடைகள் அணிந்து நல்ல உணவுகளும் உண்பார்கள். அவர்களைப் பார்க்கும்போதே சுகமாய் ஜீவிப்பவர்களென்று நன்றாய்த் தோன்றும். அப்படிப்பட்ட பெரியவிடங்களில் பல பாடசாலைகளும் குறைந்தது ஒரு வித்தியாசாலையும் உண்டு. இஸ்பெஹான் நகரத்து ஜனங்கள் சாதாரணமாய் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களே.

இஸ்பெஹான் நகரத்து ஜனங்களெல்லாம் உழைப்பும் சுருசுருப்பும் உடையவர்களாயிருப்பதுந்தவிர கைத்தொழிலில் நன்றாய்த் தேர்ந்தவர்கள்; ஆயினும் தைரியமாய் நின்று எதிரிகளை எதிர்க்கத்தக்க போர்வீரர்களல்ல. அந்த நகரம் விசேஷமாய்

வர்த்தகர்கள் போக்குவரவுசெய்வதற்கு இடமாயிருக்கின்றது. அவ்விடத்து வர்த்தகர்களுடைய நடக்கை ஒருவகையானது. அவர்களுள் அநேகர் தங்களுக்குள்ள ஆஸ்தியை உயிர்போனாலும் வெளியிடுவதில்லை. எவ்வளவு தனிகர்களாயிருந்தாலும் அநேகர்க்கு மென்மேலும் பொருள் தேடுவதில் கருத்தேயன்றி அணுவளவும் செலவுசெய்ய மனதுகிடையாது. வயதேற வயதேற அவர்களுக்கு இத்தன்மையான குணமும் விருத்தியாகும். இதற்குத் திருஷ்டாந்தமாய் அத்தேசத்துக் கதையொன்று சொல்லக் கேட்டிருக்கிறோம்.

இஸ்பெஹான் நகரத்தில் கொஞ்சநாளைக்குமுன் இறந்துபோன தனிகனான ஒரு வர்த்தகன், தான் தன் வயிற்றுக்கு ஒருவகை கேடுகெட்ட ரொட்டிதவிர மற்றொன்றும் தின்னாமலிருந்ததுமன்றி, ஒன்றுமறியாப் பாலனான தன் சிறுகுழந்தையையும் அவ்வாறே நடத்திவந்தான். இப்படியிருக்க ஒருநாள், தன் உயிர்த்தோழனொருவன் நெடுநேரம் ஒரு பாலாடைக்கட்டியைப் புகழ்ந்துபேசியதனால் அதை வாங்கும்படி நேரிட்டது. வாங்கிக்கொண்டு வீடு வந்தவுடன், தன்னைப்போல் வீண்செலவுசெய்பவன் ஒருவனுமில்லையென்று பலதரம் தன்னைத்தானே நிந்தனையாய்ப் பேசி வெறுத்துக்கொண்டு, அதைத் தொடாமலே ஒரு புட்டியில் போட்டு அடைத்துவிட்டு அவ்வளவோடு திருப்தியடைந்தான். தன் மகனையும், அவன் புஜிக்கிற உணவைப் பாலாடைக்கட்டிவைத்திருக்கிற புட்டியின்மேல் ஒத்திக்கொண்டு, புஜிக்கும்படி கட்டளையிட்டான்.

ஒருநாள் அவன் வெளியேபோய்க் கொஞ்சநேரம் கழித்து வருகையில் தன் மகன் உரொட்டியைக் கதவில் தேய்த்துத்தேய்த்துத் தின்றுகொண்டிருக்கக்கண்டு அடா! மதிகெட்டவனே! என்னகாரியஞ்செய்கிறாய்? என்று கேட்க; அதற்கு அந்தப்பிள்ளை, சாப்பாட்டுவேளையாய்விட்டதே; நீங்கள் திறவுகோலைக் கையோடு கொண்டுபோய்விட்டபடியால் கதவைத்திறந்து புட்டியை எடுக்கமாட்டாமல் கதவிலேதேய்த்துத் தின்னுகிறேன் என்றான். அதைக் கேட்டு வர்த்தகன் கோபம்விஞ்சி அந்தக் கோபாவேசம் உள்ளடங்காமல் அந்தப் பிள்ளையைத் தலையிலிடித்து: அட மடப்பயலே! உனக்கென்ன இவ்வளவு பெருந்திண்டி? ஒருநாளைக்குப் பாலாடைக்கட்டியில்லாமல் தின்னக்கூடவில்லையா? இவ்வளவு நாணயமானால் நீ என்றைக்குத் தனிகனாய் விருத்தியடைவாய் என்று அதட்டிப் புடைத்தானாம்.

உழைப்பின் சிறப்பு.

உழைப்பு எவ்வளவு சிறப்புள்ளது! அது என்னென்ன அருமையான காரியங்களைச் செய்கிறது பார்! அது தன் உத்தேசத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு வருத்தமிருந்தாலும் அஞ்சுகிறதில்லை; எவ்வளவு முயற்சி வேண்டுவதாயிருந்தாலும் தளருகிறதில்லை; எவ்வளவு இடுக்கண்வந்தாலும் மின்வாங்குகிறதில்லை; மனிதருடைய நல்லவாழ்க்கையை வளர்ப்பதில் ஆரவாரத்தோடு அருணோதயமாகிய பொற்கதவைக் கைகளால் தள்ளிக்கொண்டுபோய் எப்போதும் ஊற்றமுள்ளதாய் ஒரு நிமிஷங்கூட வீண்போகவொட்டாமல் எப்போது விடியப்போகிறது விடியப்போகிறது என்று காத்திருந்து, வேலைக்கு ஆரம்பித்து நாள்தோறும் நவநவமான மகோபகாரங்களைச் செய்துகொண்டே வருகின்றது.

காட்டை அழித்து, சதுப்புநிலத்தைச் சீர்ப்படுத்தி, பார்க்கப் பயங்கரமான வெட்டவெளியைக் கண்ணுக்கு இனிப்பாகத் தளிர்க்கச்செய்வது எது? ஏர் உழுது, நிலத்தைக் கொழுமையாக்கி, பயிர்செய்து, தாறிப்பழுத்தபின் அறுப்பறுத்து, உணவுக்கு உபயோகப்படும்படியாகப் பக்குவம் பண்ணி, இவ்வுலகத்திலுள்ள கோடாகோடி ஜனங்களையும் போஷிக்கிறது எது? செங்கல் சூளைபோட்டு, சுரங்கத்திலிருந்து கல்வெட்டியெடுத்து, அரசர்கள் வசிக்கத்தகுந்த சிங்காரமான அரண்மனைகளையும், அடியில் பருத்து நுனியில் சிறுத்து அழகாய் விளங்கும் கோபுரங்களையும், விசித்திரமான பற்பல கட்டடங்களையும் கட்டுவதும், பூமியின்கீழ்க் கிடக்கும் பாறைகளைப் பரிசோதித்து, பொன் வெள்ளி பித்தளை தகரம் இரும்புமுதலிய உலோகங்களை எடுப்பதும், இரும்பை உருக்கி பெரியஸ்தம்பம்முதல் சிறிய ஊசியீருகவும், கனமான நங்கூரமுதல் லேசான கம்பியீருகவும், புகையந்திரத்தை இயக்கும் சக்கரம்முதல் மெல்லிய வளையமீருகவும் உள்ள பற்பலவித சாமான்களாகச் செய்வதும் எது?

காட்டிலுள்ள மரத்தை வெட்டிக் கப்பல்செய்து, அகாதமான சமுத்திரத்தின்வழியாய் அலைகளை லட்சியம்பண்ணுமலும் புயலுக்குப் பயப்படாமலும் நாலு திக்குகளிலுமுள்ள தேசங்களெல்லாம் சுற்றி அங்கங்கே அகப்படும் நல்ல பொருள்களைப் பிறதேசங்களுக்குக் கொண்டுபோய், பிறதேசங்களிலுள்ள சிறந்த பொருள்களை அவைகளுக்கு மாறுகக் கொடுத்து, இப்படியே ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு ஊரிலும் அவரவர்கள் இனிதுவாழ்வதற்கு வேண்டிய சகல சாமான்களையும் நிரப்பி, இவ்வுலகத்தின்கணுள்ள யாவரும் ஒரேதன்மையாய்ச் சௌக்கியம் பெறுவதற்குக் காரணமாக நிற்கின்ற வர்த்தகத்தை நன்ருய்த் தழைத்துச் செழித்தோங்கும்படி செய்வது எது?

மந்தமான பாறைகளினின்றும் பற்பலவகைக் கண்ணுடிகள்செய்து அவைகளைத் தகுந்தவிதமாய் ஒன்ருேடொன்று சேர்த்து, கண்ணுக்குச் சம்பவிக்கும் பார்வைதோஷங்களைப் போக்கடித்து, தூரத்திருல் கண்ணுக்குத் தெரியாமலிருந்த அண்டங்கள் இவ்வளவு அளவுள்ளவை இவ்வளவு நிறையுள்ளவை என்று சரியாகச் சொல்லும்படி அவ்வளவு சமீபத்தில் இருக்கிறதுபோல் கண்ணுக்குக்காட்டி, மிகவும் நுட்பமாய்ப் பார்வைக்

குப் புலப்படாமலிருந்த அணுக்களும் இப்படிப்பட்ட அதிசயமான காட்சியா என்று வியக்கும்படிசெய்வது எது?

அல்பலோகங்களைப் பொன்னாக மாற்றுவதற்கு ஒரு இரகசியமான உபாயம் உண்டென்கிறார்கள்; அதைவிட விசேஷ மகிமையுள்ள உபாயத்தை உடைத்தானதாய், ஒன்றுக்கும் உபயோகமில்லையென்று தள்ளப்படும் பொருள்களை, மிகவும் உயர்ந்த பதார்த்தங்களாகமாற்றி, தரையிலும் தண்ணீரிலும் உண்டாகும் குப்பைகோதுகளினின்று ரசாயனசாஸ்திரவிதிகளின்படி வாசனையுள்ள திராவகங்களையும் ஆரோக்கியமான மருந்துகளையும் இன்னும் இவைபோன்ற மேலான பல பதார்த்தங்களையும் எடுக்கிறது எது?

அசாத்தியமாகவும் பிரயாசமாகவும் காணப்படும் செய்கைகளை எவ்வளவும் லட்சியம்பண்ணாமல், பெரிய பிரவாகமாக ஓடும் நதிகளை அளவிட்டு, உளைவிழும் சதுப்புநிலத்தின்மேல் செவ்வையான பாதைகளை உண்டுபண்ணி, ஆழமான காலுறுகளின்மேல் அந்தரத்தில் தொங்குவது போல் வாரதிகள்கட்டி, பாறைகளைத் துளைத்து மலையின்கீழாகக் குகை போல் வழிபண்ணுவது எது? பள்ளம் மேடாம், மேடு பள்ளமாம் என்னும் பழமொழியின் கருத்தை இப்பூமியிலுள்ள எல்லாத் தேசத்தாரும் ஒத்து வாழும்படி கூட்டிவைப்பதனால் நிறைவேற்றுவதுமல்லாமல், அந்தச் சொற்களுக்குப் பதப்பொருள் எப்படியாகின்றதோ, அதையும் உண்மையாக்குவது எது?

ஒரு நகரத்திலிருந்து மற்றொருநகரத்திற்கும், ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கும், மலைகளின் வழியாகவும், சமுத்திரத்தின்வழியாகவும் மெல்லியதாய் இருப்புக்கம்பியை இழுத்து அதன்வழியாய் வாயுவேகமும் மனோவேகமும் இணையென்று சொல்லலாகாத வேகத்துடன் சமாசாரம் தெரிவித்து, ஒருவரும் கனவிலும் நினைக்கவொண்ணாத இந்த அதிசயத்தைச் செய்வது எது?

புத்திமான்களிடத்தினின்று உதிக்கிற விஷயங்களையும், சாஸ்திரபாரங்கதருடைய கொள்கைகளையும், பெரியோர்களுடைய புத்திமதிகளையும் எல்லாரும் எக்காலத்திலும் அறிந்துகொள்ளும்படி வெற்றுக்கடிதாசியில் அச்சிட்டு, அதற்குக் கற்பிக்கும் திறமையைக் கொடுப்பது எது?

பளிங்குக்கல்லினால் கட்டி, சூரியகாந்தியில் தளதளவென்று பிரகாசிக்கிற வில்வளைவான மண்டபங்களோடு கூடி, வெற்றிஸ்தம்பங்களும் மற்ற ஜயக்குறிகளும் நிறைந்து அலங்காரமுள்ளவைகளாய் கட்டடங்கள் கட்டி கண்ணுக்கு இன்பத்தைக் கொடுப்பது எது?

நிர்மானுஷியமான பிறதேசத்துக்குள் பிரவேசித்து, ஜாலவித்தைக்காரன் தன் கையிலேந்திய மந்திரக்கோலைச் சுழற்றி விநோதத்தைக் காட்டுவதுபோல், சுத்தசூன்னியமான பள்ளத்தாக்குகளில் நவதானியங்களும் செழித்துப் பயிராகவும்; வெறுங்கல்மலைகளிலெல்லாம் பசுமையான மரங்கள்டர்ந்த சோலைகள் நிறையவும்; உலக்கடம் முதலான கைத்தொழிற் சாலைகள் விளங்கவும்; உலோகங்கள் முதலானவைகளை அடிக்கும் நாதங்களும், பல சக்கரங்கள் சுழலும் யந்திரசாலைகளின் ஒலிகளும் ஓங்கவும்; வாணிபங்கள் வேரூன்றிச்செழிக்கும் அடைக்கலஸ்தானமாயும், சகல சாஸ்திரங்கள் முழங்கும் விலாசமண்டபமாயும், சமயசித்தாந்தங்கள் ஓங்கி வளருகிற திவ்வியாலயமாயும், கோபுரம் முதலாகிய மேலான கட்டடங்கள் உயர்ந்து காட்சிதருவதான நகரம் தோன்றவும்

காரணமாயிருப்பது எது? பிறதேசத்துச் சாமான்கள் கப்பல் கப்பலாய் வந்திறங்குவதும், இவ்விடத்துப் பொருள்கள் அவ்விடங்களுக்கெல்லாம் போவதுமாக வர்த்தகத்தை விருத்திசெய்து, சாஸ்திர நியாயங்களால் பஞ்சபூதங்களையும் மன்னுயிர்க்கு உதவியாகும்படி ஸ்வாதீனப்படுத்தி, கைத்தொழில்களை உண்டுபண்ணி, அவ்வேலைகளுக்கு அழகைக்கொடுக்கச் சிற்பவித்தைகளைக் கற்பித்து, இவைகளெல்லாம் அழியாமல் என்றென்றைக்கும் விளங்குவதற்குச் சாதனமாகக் காவியங்களைப் பெருக்கி, நாகரிகம்பரவச்செய்து, ஜனங்கள் சகல க்ஷேமங்களையும் பெற்று சந்துஷ்டியையும் அனுபவிக்கும்படி அனுகூலித்து நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் மேன்மேலும் விருத்தியாகும்படி வகைதேடுவது எது?

இப்படியாக நாற்புறங்களிலும் விளங்கும் எண்ணிறந்த அதிசயமான காரியங்களைச் சாதிப்பது உழைப்பல்லவா? அப்படியானால் உழைப்புக்குச் சிறப்பு இல்லையென்று யார்தான் சொல்வார்கள்?

நகரவாசமும் நாட்டுவாசமும்.

நகரவாசத்திற்கும் நாட்டுவாசத்திற்கும் உள்ள குணாகுணங்களை நுட்பமாய் விசாரிக்கப்புகுந்தால் ஒரு பெரிய புத்தகம் எழுதலாம். ஒவ்வொன்றிலும் அததற்கடுத்த சில நன்மைகளும் சில தீமைகளும் உண்டு. ஆகையால் இதுதான் நல்லது, இதுதான் கெட்டது என்று தீர்மானிப்பது கூடாது. எவர்களுக்கு எது மனதுக்குப் பிடிக்கிறதோ அதைத்தான் அவர்கள் நல்லது என்று சொல்லுவார்கள். ஆகிலும் அவ்விரண்டிற்கும் உள்ள பேதங்களில் முக்கியமான சிலவற்றை அடியில் ஒருவாறு குறிக்கக்கருதுகிறோம்.

முதலில் நகரத்தைப்பற்றிப் பேசுவோம். உலகத்தில் மனிதனாய்ப் பிறப்பது சோம்பேறியாக வீண்பொழுதுபோக்கித்திரியாமல், பிறருடன் கலந்துவாழ்ந்து தன்னாலியன்றமட்டும் நல்லகாரியங்களைச் செய்துகொண்டு, அவர்களால் தனக்குக் கிடைப்பதைப் பெற்று, கண்ணாலே பார்க்கவேண்டியவைகளைப்பார்த்து, காதாலே கேட்கவேண்டியவைகளைக் கேட்டு, உலகத்திலுள்ள பலபல மாதிரிகளையும் அறிந்து இப்படியாகவுள்ள பற்பல சந்தோஷங்களை அனுபவிப்பதற்காகவாதலால், இவ்விதமாக வாழ்நாளைக் கழிக்க விருப்பமுடையவர்கள் நகரத்தில் வசிப்பதே நலம். போகங்களை அனுபவிக்கவேண்டும் என்கிறவர்களுக்கு நாட்டில் ஒன்று இருந்தால் இங்கே நூறு இருக்கும். லோகோபகாரமாயும் நியாயமாயும் உள்ள காரியங்களுக்காகப் போராடுவதற்கு ஏற்ற இடமும் இதுவே. கோடாகோடி ஜனங்களும் ஒன்றுகூடி பாடுபடுவதற்கான நகரவாழ்க்கையில் சேர்ந்தமாத்திரத்தில் அநேகருக்கு

ஆனந்தமுண்டாகும். நாகரிகஜனங்கள் அநேகமாய் நகரவாசத்திலேயே பிரியமுள்ளவர்களாயிருப்பார்கள். விளக்குகளில்லாமல் கேடுகெட்டபாதைகளும், வேலையறியாத சேவகர்களும், அருவருப்பான கட்டைவண்டிகளும், வாயில்வைக்கவழங்காத சோறும் ஆகிய இவைகளைக்கொண்டு சீர்திருத்தமில்லாத நாட்டுஜனங்கள் திருப்தியடைவார்கள். இத்தன்மையான குறைவுகள் நகரத்தில் விசேஷமாய் இருக்கமாட்டா. இந்த விஷயங்களில் அதிகமாய்க் கவனம் வைக்காமலிருந்தால்மாத்திரந்தான் புத்தியைப் பெருக்குவதற்கொத்த மேலான விஷயங்களில் மனதைச் செலுத்த இலகுவாயிருக்கும். ஒழுங்கு, கவுரவம், வணக்கம், மரியாதைமுதலிய நல்லொழுக்கங்கள் படிவதற்கு நகரமே தகுந்தவிடம். நாட்டுப்புறத்திலிருந்தால் ஒன்றையும் பாராமல் யதேச்சையாயிருக்கலாமென்று நினைப்பதுண்டு. அரையில் கந்தைத்துணியோடு திரிந்தாலும் திரியலாம் என்பது ஒன்றேதவிர மற்றப்படி யதேச்சையாயிருப்பதற்கு இடமில்லை. நாடுகளில்தான் வேலையற்ற அண்டையயலார்கள் அவன் அப்படி இவன் இப்படியென்று குற்றஞ்சொல்லுவதில் கண்ணாயிருப்பார்கள்; பட்டணங்களிலோ அவரவர்களுக்குத் தங்கள்தங்கள் வேலைகளைச்செய்து முடிக்கவே பொழுது போதாமல் இருக்கின்றமையால், அடுத்த வீட்டுக்காரன்பெயரை விசாரிக்கவும் அவகாசம் இல்லை; தெருவில் போகிறவன் இன்னானென்று தெரிந்துகொள்ள நேரமுமில்லை. நாட்டுப்புறத்தில் யாராவது புத்திமான் ஒருவனிருந்தால் அவனும் மூடர்களோடு சேர்ந்து மடையனாவான்; நகரத்திலுள்ள மூடர்கள் வல்லவருடைய சகவாசத்தினால் சமர்த்தராகிறார்கள். சிரமப்பட்டு ஜீவனம் சம்பாதிக்கவேண்டும் என்கிறதில்லாமல் சகல சம்பத்துகளும் நிறைந்திருப்பவர்கள் நாட்டுப்புறத்திலிருந்தால் பொழுது போகாமல் அவஸ்தைப்படுவார்கள்; சரீரத்தில் வியாதி ஒன்றும் இல்லாதிருந்தாலும் இன்னதுசெய்வதென்று தெரியாமல் மந்தமாயிருப்பதே பெரும்வியாதி; பொழுதுபோக்குவதற்கு நகரத்தில் பல வழிகளிருப்பதால் அது இந்த வியாதிக்கு மருந்துபோலாகும். வீட்டில் தாகம் எடுத்தால் உடனே தண்ணீர்குடிக்கலாம், காட்டில் நாவரண்டாலும் தண்ணீர்கிடைக்கமாட்டாது; அப்படிப்போலத்தான் நகரத்திலிருப்பவன் பொழுதுபோகாமலிருந்தால் ஏதாவது ஒரு விநோதத்தில் மனதைச் செலுத்தலாம்; நாட்டுப்புறத்திலிருப்பவனுக்குப் பொழுதுபோக்க ஒன்றுமில்லாவிட்டால் அது துன்பமாகவே தோன்றும்.

நகரவாசத்தில் இத்தன்மையான மேன்மைகள் பலவுண்டு; இனி நாட்டுவாசத்தில் என்னமகிமை இருக்கிறதென்று சற்றுப் பார்ப்போம். கற்படுத்தபாதையில் நடந்துநடந்து நகரத்தானுக்கு அவயவங்கள் வரவர விறைந்துபோக, மலையின்மேலும் அலட்

சியமாய் ஏறும் துணிவும் வலிவும் நாட்டுப்புறத்தானுக்கு முது மைக்காலபரியந்தமிருக்கும். காதைச் செவிடாக்கும் சத்தங்களும், அருவருப்பான நாற்றங்களும், வேலைக்குப் பாதகமான அவசரங் களும் இடையூறுகளும் இவைபோன்ற பல நிர்ப்பந்தங்களும் நகரத்திலுண்டு; நாட்டில் இப்படிப்பட்ட தொந்தரவுகள் ஒன் றுங்கிடையாது. நகரத்தில் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய இன் பங்கள் அநேகம் உண்டென்றாலும் அவைகளை அனுபவிப்பத ற்குச் சாவகாசமெங்கே? புகைவண்டி இன்னும் இரண்டுமூன்று நிமிஷத்தில் புறப்படப்போகிறதென்கிறபோது நின்றபடியே சாப் பிட்டதும் சாப்பிடாததுமாய் ஓடுகிற நகரத்தானுக்கு சாப்பாடு எவ்வளவு திவ்யமாய் சமைத்திருந்தால்தான் என்ன? நகரத்தார் இன்பங்களை ருசிபார்க்கிறார்கள்; நாட்டாரோ தங்களுக்குக் கிடைக்கும் இரண்டோர் இன்பத்தை நன்றாய்த் தின்றுவிடுகிறார் கள். கிடைப்பதற்குமுன்னமே கிடைக்கும் கிடைக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்து கிடைத்தபிறகு அனுபவித்து, அனுப வித்தபிறகு ஆடுமாடுகள் அசைபோடுகிறதுபோல் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள்; இவ்விதமாய் அனுபவிக்கும் இன் பம் மனிதனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்குமேயல்லாது நகரத் தானுடைய இன்பம் இன்பமல்ல. நாட்டினிடத்திலுள்ள குணங் கள் மனிதனுடைய இயல்புக்கு மிகவும் அடுத்தவை; நகரம் கேவலம் உற்சாகத்தைமாத்திரம் கொடுக்கும். ஏழு எட்டு மாத காலம் நகரத்தில் வாசம்பண்ணுகிறவன் நாட்டுப்புறத்துக்குப் போய் சிலநாளிருக்கவேண்டுமென்று அபேட்சைகொள்ளுகி ருன்; அதேனெனில் சகலமும் சம்பூரணமாயிருக்கிற நகரத்தில் மனிதனுக்கு முதன்மையாய் வேண்டிய சுத்தமான தண்ணீரும் நல்லகாற்றும் கிடைப்பது அரிது. அன்றியும் அதிக ஜோலிக்குப் போகாமல் சாந்தமாய்க் காலத்தைப் போக்குவதற்கு நாட்டுப்பு றமே நல்லது. நாட்டில் வேலை ஒன்றும் இல்லையென்பது பிசகு; கடைகடையாய்த் திரிந்து அங்கே என்ன இருக்கிறது இங்கே என்ன இருக்கிறது என்று பார்க்கிறதும், தெருவில்போகிற சண்டைகளில் கலக்கிறதும், ஒருவனையொருவன் பரிகாசம்செய் கிறதுமாய் வீண்பொழுதுபோக்கும் நகரத்தானுடைய வேலைக ளைக்காட்டிலும் நாட்டிலிருந்து நிலத்தை உழுது சாகுபடிசெய்து லாபம்சம்பாதிக்கத் தேடும் உபாயங்கள் குறைந்தனவோ? ஆகை யால் சுத்த மூடனாயிருப்பவன் நாட்டுப்புறத்தில் வேலையில்லை என்பானேதவிர, மற்றப்பேருக்கு நாட்டுவேலையே சிறந்தது.

மேலேகூறிய பேதங்கள் வெளிப்படையாகத் தோன்றும் சில முக்கியமான பேதங்கள்; முன்னமே சொன்னபடி தீர்க்கமாய் ஆராயத்தொடங்கினால் நுட்பமான பேதங்கள் அனந்தமிருக்கும். இவ்விரண்டில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்று சொல்

லுவது எளிதன்றாகிலும், முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. மனிதனுக்கு தேகசௌக்கியந்தான் முதன்மையாய்ப் பார்க்கவேண்டியது; ஆகையால் அதற்கு எந்த இடம் அனுகூலமாயிருக்குமோ அதைத்தான் சிறந்ததென்று சொல்லவேண்டும். இரண்டிற்கும் உள்ள தாரதம்மியங்களையும் பேதங்களையும் நிதானமாய் யோசித்து, இதுதான் சிரேஷ்டம் என்று தீர்மானிப்பது புத்திமான்களுடைய கடமை.

இதுபற்றி இங்கு இவ்விஷயத்தை ஒருவகையாய் தீர்மானிக்கலாஞேம். நகரவாசமே சுவுக்கியகாம் என்பதற்கும், நாட்டுவாசமே சவுக்கியகாம் என்பதற்கும் அவரவருடைய புத்தியின் போக்கும் மனதின் நிலையுமே காரணமாயிருக்கின்றன. எப்படியென்றால், சந்தடிகள் வேண்டாமல் ஏகாந்தமாயிருப்பதே இயற்கையான இதயமும், மரங்கள் காடுகள் மலைகள் முதலான இயற்கைப்பொருள்களைக் கண்டு, அவைகளின் தன்மையான அழகையே விசாரிக்கிற புத்தியும் உள்ளவர்களுக்கு நாட்டில் வசிப்பதே இனிப்பாயிருக்கும்.

இப்படியல்லாமல் நாலுபேர் கூடுமிடங்களிலே செல்வதும் அங்கங்கே நடக்கும் செய்திகளையும் அவரவர் பேசுவது நடப்பது முதலான காரியங்களையும் அறிய விரும்புகிறவர்களுக்கும், புலவர் கூட்டத்தைக் காணவும் அவர்கள் பிரசங்கத்தைக் கேட்கவும் பிரியமுள்ளவர்களுக்கும், நானாதேச விருத்தாந்தங்களையும், நானாதேசவஸ்துக்களையும், நாநாதேச ஜனங்களையும் காண அபேக்ஷைகொண்டவர்களுக்கும், பலவகைப்பட்ட கல்விப்பயிற்சியையும், பற்பல விதமான சித்திர சில்பகீதவாத்திய விநோதங்களையும் கண்டு களிக்க மனமுள்ளவர்களுக்கும் நகரவாசமே பிரியமாயிருக்கும். ஆனாலும் இவ்விரண்டிலும் எது விசேஷமானதென்று யோசித்தால் மனிதன் ஜந்மமெடுத்ததற்குப் பயன் ராஜகாரியங்களிற் பிரவேசித்து தேசோபகாரமான மேன்மைகளைச் செய்து கீர்த்திபெறுவதும், பல விநோதங்களைப் பார்த்தும் அவற்றின் காரியங்களை ஆராய்ந்தும் ஆநந்தத்தையடைவதுமேயாதலால் இப்பேறு நகரவாசிகளுக்கன்றி நாட்டிலுள்ளோருக்குக் கிடைப்பது அருமையாயிருக்கும். அன்றியும் எவ்வகையான சச்சரவுகளால் நேரிடும் கோபதாபங்களும், இஷ்டஜனங்களுடைய வெறுப்பு பிரிவு முதலான காரணங்களால் விளையும் துக்கங்களும் சீக்கிரத்தில் மழுங்கி மறக்கப்படுவதற்கு நாட்டைவிட பலவகைக் காட்சிகளையுடைய நகரமே உசிதமான இடம். ஆனதுபற்றி நகரவாசிகள் வீட்டில் என்ன அமர்க்களங் கண்டாலும் வீதியில் அமைதியைக்கண்டு நாட்டிலுள்ளவரைவிட சுகமுற்று வாழ்கின்றனர்.

தக்காணத்துப் பூர்வகதைகள்.

மூன்று வல்லவர்கள் வேதாளங்களை வென்ற கதை (தொடர்ச்சி.)

குறிவைத்து பாணம் போட்டு அடிப்பதில் மகா சமர்த்தனான ஒருவன், தனக்குச் சமானம் ஒருவருமில்லையென்று கருவங்கொண்டு, நாள் தப்பாமல் வேடிக்கையாய்த் தன் மனையாள் மூக்குத்தி முத்துக்களை அவளுக்குச் சிறிதும் காயம்படாமல் குறிபார்த்து அடித்துவந்தான். அவள், தன் புருஷன் போடுகிற பாணம் என்றைய தினம் தன்மேல் படுமோவென்று விசனமடைந்து, ஒருநாள் தன் புருஷனைப்பார்த்து: உம்மைவிடச் சமர்த்தர்கள் எத்தனையோபேர்களுண்டென்று இகழ்ந்துபேசவே, அவன்: ஆனால் அதைப் பார்த்துவரவேண்டுமென்று தேசயாத்திரையாய்ப் புறப்பட்டான். வழியிலே தன்னைப்போலவே ஒரு மல்லனும், பண்டிதனும் தங்களைவிட வல்லவர்கள் எங்கேயிருக்கிறார்களோ பார்த்துவரவேண்டுமென்று தேசசஞ்சாரமாய் வந்துகொண்டிருக்கக்கண்டு, தானும் அவர்களுடன் சேர்ந்து, மூவரும் ஒரே கருத்துடையவர்களாதலால் சகோதரர்கள்போல் பாவித்து, அவர்களோடு பண்டிதனுடைய வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தான். ஒருநாள் அதிக புத்திசாலியான பண்டிதன் நல்ல விருந்து உண்பதற்காக ஆட்டுமந்தையிலிருந்து கொழுத்த ஓர் ஆட்டைப் பிடித்துவரும்படி, மிக்கபலிஷ்டனான மல்லனோடு சொல்ல, அவன் அப்படியே போய்த் தேடி, இவர்களை மோசஞ்செய்யும்படி ஆடாக மாறுவேஷம் பூண்டுவந்த, ஒரு வேதாளத்தைப் பிடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். பண்டிதன் அதின் நிலைமையைக்கண்டு வேதாளமென்று அறிந்து அதைத் தான் தின்றுவிடுவதாய்ப் பயமுறுத்தவே, அந்த வேதாளம் நடுநடுங்கித் தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அவர்களுக்கு அளவற்ற பொருள் கொண்டுவந்து கொடுத்தது என்று சென்ற சஞ்சிகையிற் சொன்னோமே:

அந்தப் பொருள்களை எடுத்துக்கொண்டு வேதாளம் திரும்பிப் பண்டிதன் வீடுவந்துசேர மூன்றுநாளாயிற்று. அதைப் பார்க்கவே பண்டிதன், மிகவும் கோபங்கொண்டவன்போல் கண்சிவந்து, நீ திரும்பிவருவதற்கு ஏன் இத்தனைநாள்? கூடிய சீக்கிரத்தில் வருவதாய்ச் சொல்லிப்போனாயல்லவா? என்று கேட்க, அது: ஸ்வாமி! நான் என்னசெய்வேன்; என் உடனாளிகள் நான் இப்பொருள்களை வாரிக்கொண்டு வருவதைக்கண்டு வெகுதூரம் தர்க்கம்பேசி வழிவிடவேமாட்டோமென்று வெகுநேரம் மறுத்தார்கள்; உங்களைப்பற்றி நான் என்னசொல்லியும் அவர்கள் நம்பவில்லை; வெகுதூரம் அவர்களோடு போராடித் தப்பித்துக்கொண்டுவந்தேன்; இதுவுமல்லாமல் மறுபடி நான் போய்ச் சேர்ந்தவுடன் உங்களுக்குப் பணிவிடை செய்வதைப்பற்றி விசாரணை நடக்கப்போகிறது என்று வணக்கத்துடன் விண்ணப்பஞ்செய்தது. அதுகேட்டுப் பண்டிதன்: உங்கள் ராஜசபை எங்கே? என்றான். அந்த வேதாளம்: அது இவ்விடத்திலில்லை; வெகுதூரத்தில் ஒரு பெருங்காட்டுமத்தியில் இருக்கிறதென்று சொல்லவே, அவன்: நாங்கள் அந்த விடத்தையும், உங்கள் ராஜாவையும், அவன் சபையையும் பார்க்கவேண்டும்; உங்கள் ராஜாவுக்குக்கூட நாங்கள்தாம் மேல் அதி

காரிகள்; ஆதலால் நீ போம்போது எங்களையும் அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்; இல்லாவிட்டால் நீங்கள் எங்கள் கோபத்திற்குப் பாத்திரமாவீர்கள் என்றான். அவன் வெகு துணிச்சலாய்ப் பேசுகிற பேச்சுகளைக் கேட்டு வேதாளம் பயந்து, நல்லது, இதோ தங்கள் கட்டளைப்படியே காத்திருக்கிறேன்; என் தோள்மேல் ஏறிக்கொண்டால் உங்களை அவ்விடம் கொண்டுசேர்ப்பேன் என்றது.

வேதாளங்கள் சபைகூடுகிற விநோதத்தைப் பார்த்துவரும்படி பண்டிதன், மல்லன், முத்துக்குறியடிப்போன் ஆகிய மூவரும் அதின் தோளில் ஏறிக்கொண்டார்கள். வேதாளம் அவர்களைத் தூக்கிக்கொண்டு வெகு வேகத்துடன் ஆகாயமார்க்கமாய்ப் பறந்து, தாங்கள் சபைகூடுமிடத்திற்குப்போய், வேதாளராஜனுடைய சிங்காதனத்திற்கு நேரே உயா ஒரு மரக்கிளையில் விட்டது. கொஞ்சநேரத்தில் கலகலவென்று ஒரு இரைச்சலுண்டாயிற்று. உடனே அநேகமாயிரம் வேதாளங்கள் அந்தச் சிங்காதனத்தைச் சுற்றிவந்து கண்ணுக்கெட்டினதூரம் நெருங்கிப்போயின. மரத்தின்மேல் மனிதர்கள் வந்து உட்காந்திருப்பதை ஒன்றுவது கவனிக்கவில்லை.

சபைகூடினவுடனே வேதாள சக்கரவர்த்தி சிங்காதனத்தில் வந்து உட்காந்து, தமது பொருளை மனிதருக்குக் கொண்டுபோய்க் கொடுத்த குற்றவாளியைச் சபைமுன்னே பிடித்துவரச்சொல்லிக் கட்டளையிட்டது. அக்கட்டளைப்படியே மற்றவையெல்லாம் அந்த வேதாளத்தைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சபைமுன்னே நிறுத்திவைத்தன. விசாரணைசெய்ததில் அது செய்தது குற்றமேயென்று நிரூபணமாயிற்று. ஆயினும் அந்த வேதாளம் வெகு தைரியமாய், எங்கள் மகாராஜனே! ஒரு விண்ணப்பமுண்டு. திரவியங்கொண்டுவரும்படி என்னை நிர்ப்பந்தஞ்செய்தவர்கள் சாதாரணமான மனிதர்களல்ல; மிகவும் வல்லவர்கள்; மூவுலகத்தையும் பயமுறுத்தத்தக்கவர்கள்; அவர்கள் வேதாளங்களைத் தின்பார்களாம்; நீங்கள் எங்களை ஆளுவதுபோல், உங்களையும் ஸ்வதந்திராதிகாரமாய் அவர்கள் ஆள்கிறார்களாம்; என்னைப் பிடித்துக்கொண்டு விடவேமாட்டோம் என்றார்கள். அவர்களுள் ஒருவர் நாள்தோறும் பனிரண்டு வேதாளம் தின்பாராம். அவர் மனைவி மூன்று தின்பாளாம்; அவர் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேதாளந் தின்பார்களாம்; ஆதலால் அவர்க

ளுக்கு நான் ஊழியஞ்செய்யும்படியாயிற்று; என்மேல் சிறிதும் குற்றமில்லை என்றது.

அதைக்கேட்டு, வேதாளசக்கரவர்த்தி: "அப்படியாயின் அவர்களை நாங்கள் பார்க்கவேண்டும்; பார்த்தபிறகுதான் எங்களுக்கு உண்மைப்படும்; ஆயின்—" என்று பேசுந்தருணத்தில் அம்மூவரும் உட்கார்ந்திருந்த மரக்கிளை ஒடிந்து அவர்கள் ஒருவர்பின் ஒருவராய்க் குண்டாங்கரணம் போட்டுக்கொண்டு வேதாளராஜனுடைய தலைமேல் விழுந்தார்கள். ஆகாயத்திலிருந்துதான் குதித்தார்களோவென்று அங்கிருந்த பூதங்களெல்லாம் நடுநடுங்கிப்போகவே, இதுதான் தருணமென்று முதலில் வீழ்ந்த மல்லன் தன் வலிமையெல்லாங்கொண்டு அந்த வேதாளராஜனைக் குத்தி இடித்துக் கட்டி நசுக்கினான். அவன் பின்னே வீழ்ந்த முத்துக்குறியடிப்போனும் அப்படியே செய்தான். அதுகண்டு அப்போது வீழ்ந்துகொண்டிருந்த பண்டிதன்: "ஆம் அப்படித்தான்; ஆம் அப்படித்தான்; முதலில் இதைத் தின்றுபோட்டால் மற்ற வேதாளங்களைப் பிறகு தின்னலாம் என்றான். அதைக் கேட்கவே அங்கிருந்தவையெல்லாம் பயந்து ஒன்று தப்பாமல் ஓடிப்போயின. அவைகளின் ராஜாமாத்திரம் தனியே அகப்பட்டுக்கொள்ளவே, அது ஓ மகாப்பிரபுக்களே! என் உயிரைமாத்திரம் தப்பவிடுங்கள்! என்னைப் பிழைப்பூட்டுங்கள்! நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையே; உண்மையே; உங்களுக்கு எது வேண்டுமானாலுந் தருவேன் என்று கூவி முறையிட்டது. பண்டிதன், மாளாது; மாளாது; நேசர்களே! நீங்களேன் சும்மாவிருக்கிறீர்கள், உங்கள் வேலையைப் பாருங்கள் என்றான். அவர்கள் முன்னிலும் பலமாய் அதை இடிக்கத் தலைப்பட்டார்கள். தன் உயிரைமாத்திரம் தப்புவிக்கும்படி வேதாளம் எவ்வளவு வேண்டியும் அவர்கள், மாட்டோம் என்று தங்களுக்குக் கைகால் ஓய்ந்துபோய் அந்த வேதாளமும் ஒன்றுந்தோன்றாமல் பிரமித்துப்போமளவும் அதைத் தண்டித்துக்கொண்டிருந்தார்கள். அந்த வேதாளம் சர்வசத்தும் ஒடுங்கி ஒன்றுந் தோன்றாமல் கருத்தழிந்துபோனது கண்டு அந்தப் பண்டிதன்: உன்னை எப்படி விட்டுவிடுகிறது? இக்காட்டில் பொருளிருப்பதனால் எங்களுக்கு என்னபயன்? இவைகளையெல்லாம் எங்கள் வீட்டில் கொண்டு சேர்ப்பாயானால் உன்னைத் தின்னாமல் விட்டுவிடுவோம். இப்போது நாங்கள் மிகவும் பசித்திருப்பதனால் எங்களுக்கு வேறுஉணவாவது கொடுக்கவேண்டும் என்று சொன்னான்.

அந்த வார்த்தையைக் கேட்கவே, வேதாளம் வெகு சந்தோஷ மடைந்து அப்படியே ஆகட்டும், இதோ காத்திருக்கிறேன் என்று ஓடிப்போன தன் பரிவாரங்களை அழைத்து, அந்த மூன்று பலிஷ்டர் களையும் எடுத்துக்கொண்டு வேண்டுமளவு தங்கள் நிதிகளையும் வாரிக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்துபோம்படி கட்டளை யிட்டது. சகலமான வேதாளகணங்களும் நான் முன்னே நான் முன்னேயென்று அந்த மூன்று வல்லவர்களுக்கு ஒத்தாசைசெய்ய ஆவலோடு மேல்விழுந்து ஓடிவந்தன. அவ்வளவிலும் பண்டிதன் அந்த வேதாளராஜனை நோக்கி: நீ இப்போதே போய்விடலா மென்று நினைக்கிறையோ? இந்த வேலையெல்லாம் நிறைவேற்றி யாகிறவரையில் உன்னை நாங்கள் விடமாட்டோமென்றான்.

அந்தக் கட்டளைப்படியே வேதாளகணங்களெல்லாம் ஓடிவந்து, அந்த மூன்று வல்லவர்களையும் பண்டிதன் வீட்டிற் கொண்டுசேர்த்து, அந்த வீட்டில் சகலவித சம்பத்துக்களையும் கொண்டுபோய்க் கொட்டி நிறைத்துவிட்டு அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பறந்துபோயின. இவ்வாறு மகா தைரியசாலியும் மேதாவியுமான அந்தப் பண்டிதன் தான் அந்த வேதாளத்திற்குச் சிறிதும்பயப்படா தவன்போல் பாவித்து, வேதாளத்தின் கையில் அகப்பட்டுக்கொள் ளாமல் தன் குடும்பத்தையெல்லாம் காத்ததுமன்றி, பூதகணங்க ளையெல்லாம் தனக்குக் கீழ்ப்படுத்தி, தன் வீட்டுக்கு அபாரமான சம்பத்துக்களும் கொண்டுசேர்த்தான். பின்பு அந்தப் பண்டிதன் அந்த விலையில்லாப் பொருள்களை மூன்று பங்காகப் பிரித்து தானொன்று எடுத்துக்கொண்டு, தன் தோழர்களுள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொருபங்கு கொடுத்து அவர்களை அனுப்ப மனமில்லாமலே மிகவும் பரிவோடு அவரவர் தேசத்திற்கு அனுப்பினான்.

முத்துக்குறியடிப்போன் அளவற்ற ஐசுவரியத்தோடு மிகவும் சந்தோஷமாய் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தன் வீட்டுக்கு வந்து, தான் கொண்டுவந்த பொருள்களையெல்லாம் தன் மனைவி கையில் கொடுத்து, தான் யாத்திரைபோன செய்திகளையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லி, நீ சொன்னது உண்மைதான்; என்னை விடச் சமர்த்தர்கள் எத்தனையோபேர்கள் உண்டு; மல்லனும் பண்டிதனும் இல்லாவிட்டால் இந்தப் பொருள்களைக் கொண்டுவர என்னால் ஒருநாளும் முடியாது என்றான். அன்றுமுதல் அவன் தன் மனைவியின் நாசியிலிருக்கிற முத்தைக் குறிவைத்து அடிப் பதை விட்டுவிட்டான். அதனால் அவன் மனைவி சந்தோஷ மடைந்தாள். இருவரும் நெடுநாள் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

வீண்வாதஞ்செய்பவர்.

(தொடர்ச்சி.)

இதுவரையிலும் பகிரங்கமான சபைகளில் எடுத்ததற்கெல்லாம் ஆக்ஷேபம் செய்து குதர்க்கம்செய்பவர்களைப்பற்றிப் பேசினோம். இனித் தத்தம் இடங்களிலிருந்து வந்தவர்களிடத்திலெல்லாம் வீண்வாதம் செய்பவர்களுடைய குணகுணங்களைக் கவனிக்கவேண்டும். வெளியில்வாராமல் குதர்க்கம்செய்து திரிபவர்களுக்குக் கணக்கில்லை. அவர்கள் விசேஷமாகப் படித்தவர்களல்லர். சாஸ்திர விசாரம்செய்து தெளிந்தவர்களும் அல்லர். உலகத்திலுள்ள பற்பல தேசங்களின் பூர்வீக நிலைமையையாவது தற்கால ஸ்திதியையாவது சரித்திரமூலமாய் வாசித்தவர்களும் அல்லர். அவர்கள் நிறமை இவ்வாறாக இருக்கத் தேசாபிவிருத்திமுதலான பெரியகாரியங்களில் தாமும் தலையிட்டுக்கொண்டு தெரிந்தவர்களைப்போல் நடிப்பது வெட்கமான காரியம். இங்கிலாந்துதேசத்தில் பெற்றோர் யாவரும் தங்கள் பிள்ளைகளுக்கு அம்மை குத்துவிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிடில் தண்டிக்கப்படுவார்களென்றும் துரைத்தனத்தார் உத்தரவுசெய்திருக்கிறார்கள். அதை நிராகரித்தபேர்கள் அனுதினம் நியாயஸ்தலத்தில் தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களுள் பெரும்பாலார் யார்க்கு என்னும் மாகாணத்தில் இருக்கிறவர்கள். அம்மைகுத்துவதால் தேகத்துக்குப் பிரதிகூலமேயன்றி என்னளவும் அனுகூலம் இல்லையென்றும், ஆதலால் தம்முடைய பிள்ளைகளுக்கு அம்மைகுத்துவிக்கச் சம்மதமில்லையென்றும் அவர்கள் வாதிக்கிறார்கள். அவர்களுடைய அவிவேகத்தையும் துர் ஆக்ஷேபத்தையும் கேட்க ஜீவகாருணியமுடைய யாவருக்கும் மனவருத்தமுண்டாகின்றது. அம்மாகாணத்தார் வைசூரியைப்பற்றிப் பிறந்திருக்கிற புஸ்தகங்களைப் பொறுமையோடு ஆராய்ந்துபார்ப்பாராகில் உண்மை இன்னதென்றும், தாங்கள் பிதற்றுவதெல்லாம் மதியீனத்தால் உண்டான வீண்வாதமென்றும் நன்றாய்த் தெரியவரும். அப்புஸ்தகங்களை வாசித்தறியுமட்டும் யார் சொன்னபோதிலும் மனதில் ஏறாது. ஆயினும் கூடியமட்டும் சிறிது சொல்லிப் பார்ப்போம்.

வைசூரியென்பது பெருவாரியாக வருகிற ஒருவிதமான தொத்துவியாதி. அதை ஒட்டுவாரொட்டியென்றும் சொல்லுவார்கள். யாவருக்கும் வரத்தகுந்ததாயினும் சிறுவயதிலேயே மிகுதியாய்ப் பீடிக்கும். ஆரம்பத்தில் தேகமெங்கும் கொப்பளங்காணும். முகம்வீங்கி உருமாறிவிடும். கண்மயங்கிப்போகும். தேகமோ பார்க்கப்பிடியாது. வைசூரிவந்தவர்கள் பிழைப்பது அரிது. தப்பிப் பிழைப்பவர்களுக்கு உடல்முழுதும் வடுவும் புள்ளியுமாயிருக்கும். அநேகம்பேருக்குக் கண் அடியோடு கெட்டுப்போகின்றது. எழுபது, எண்பது, வருஷத்துக்குமுன் சீர்மையில் வைசூரியால் உருமாறி விகாரமடைந்தவர்களை ஊரெங்கும் மிகுதியாய்க் காணலாம். உருவிழந்த பெண்கள் அநேகர். கண்ணிழந்த வறியோர் தெருக்களில் நாயைப்பிடித்துக்கொண்டு பிச்சையெடுக்கப்போவார்கள். இன்னும் பலவாறாகப் பீடிக்கப்பட்டு நிர்ப்பாக்கியர்களான ஜனங்களை அக்காலத்தில் சீர்மையெங்கும் காணலாம். நூற்றைம்பது வருஷத்துக்குமுன் சீர்மையில் வை

சூரியால் உண்டான சேதத்தைக் கேட்கப்பிடியாது. அக்காலத்தில்தான் அம்மைகுத்தும் வழக்கம் முதல்முதல் உண்டாயிற்று. வைசூரிவந்தவர்களுடைய தேகத்திலிருக்கும் கொப்பளத்தை உடைத்து அதிலிருக்கிற பாலையெடுத்து வைசூரிவராதவர்களின் புயங்களில் கத்தியால் கீறி அதை வைத்தால் அவர்களுக்கு உடனே வைசூரி மிதமாக உண்டாகுமென்றும், பின்னிட்டுவருவது அருமையென்றும், வந்தபோதிலும் குற்றமில்லையென்றும் அநுபோகத்தால் தெரியவந்தது. அவ்வாறு செய்வதில் ஒரு பிசகு காணப்பட்டது. அதென்னவெனில், அம்மைகுத்தின உடனே உண்டாகிற மிதமானவைசூரியினால் அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் அதுவே பெருவாரியாக ஆரம்பித்துப் பீடிக்கிறதுண்டு. வைசூரியைத் தொலைக்கும்பொருட்டுச் செய்த பரிகாரமே அவ்வைசூரியை எழுப்புவதற்குக் காரணமாகிக் கிணறுவெட்டப் பூதம்புறப்பட்ட கதைபோல் முடிந்தது. இக்கெடுதியை விலக்கும்பொருட்டு வேறொரு உபாயம் தேடினார்கள். எழுபத்தாறுவருஷத்துக்குமுன்பாக ஜென்னர் என்ற ஒரு வைத்தியர் இருந்தார். அவர் ஹண்டர் என்னும் பேர்பெற்ற வைத்தியரிடத்தில் படித்தவர். ஒரு கிராமத்தில் ஜென்னர் வைத்தியஞ்செய்துவரும்போது ஒருநாள் ஒரு கிழவி அவரைப் பார்க்கிறதற்கு வந்தாள். அவளோடு வார்த்தையாடும்போது வைசூரியைப்பற்றிப் பேசினார். அதைக்கேட்டுக் கிழவி தனக்குக் கோமாரிவந்திருப்பதால் வைசூரியினால் பயமில்லையென்று சொல்லிச் சந்தோஷித்தாள். கோமாரிவந்தவர்களுக்கு வைசூரி வருவதில்லையென்கிற சங்கதி அப்போதுதான் ஜென்னருக்குத் தெரிந்தது. உடனே அதைத் தீரவிசாரித்தபோது நாட்டிலுள்ள பசுக்களுக்குச் சிலகாலத்தில் அம்மைவருகிறதாகவும், அந்தச் சமயத்தில் பசுவின் மடியைப்பிடித்துப் பால்கறக்கிற பெண்களுக்கும் அந்த நோய் தொடருவதாகவும் பின்னிட்டு அவர்களுக்கு வைசூரிவருவதில்லையென்றும் ஜனங்கள் சொன்னார்கள். அதனால் திருத்தியடையாமல் சாஸ்திரமுறையாகப் பலவாறு சோதனைசெய்து ஜனங்களுடைய வாய்மொழி உண்மையென்று கண்டுணர்ந்து பசுவின் மடியிலிருந்து அம்மைப்பால் எடுத்துக் குத்துவதால் வைசூரிவராமல் நின்றுவிடுமென்பதாகப் புஸ்தகம் எழுதி வெளியிட்டார். அவர் சொன்னதையுங்கூடப் பாமரர்களும் சில பண்டிதர்களும் வழக்கம்போல ஆக்ஷேபித்தார்கள். பசுவின் மடியிலிருக்கிற கொப்பளத்திலிருந்து பாலெடுத்துப் பிள்ளைகளுக்குக் குத்தினால் அவர்களுக்கு அறிவில்லாத மிருகசேஷ்டைகள் உண்டாகுமென்று சிலர் வாதித்தார்கள். வீண்வாதமெல்லாம் நொடிப்பொழுதில் மறைந்துபோயிற்று. அம்மைகுத்திய பிள்ளைகள் வைசூரியிலிருந்து விலகிநிற்பதை யாவரும் பிரத்தியக்ஷமாகக் கண்டார்கள். ஜென்னருடைய கீர்த்தி நாலுதிக்கிலும் பரவிப் பிரகாசித்தது. அவர்காலத்திலேயே புறத்தேசமெல்லாம் அம்மைகுத்துவதற்கு ஆரம்பஞ்செய்தார்கள்.

சிலகாலமானபின்பு அம்மைகுத்துவதால் வைசூரி நீங்கி வேறுநோய்கள் உண்டாவதாக ஆக்ஷேபம் பிறந்தது. அதற்கு யாதொரு ஆதாரமும் இல்லை. பசுவினுடைய அம்மைப்பால் பரிசுத்தமானதாயிருந்தால் யாதொரு கெடுதியும் சம்பவிக்கமாட்டாது. ஒரே பசுவிலிருந்தாவது ஒரே பிள்ளையினிடத்திலிருந்தாவது நெடுநாளைக்குப் பால் எடுப்பது பிசகு. பாலெடுக்கிற தேகம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். இவ்விஷயங்களைக் கவனித்து அம்மைகுத்தினால் வைசூரி நின்றுபோ

வதுமாத்திரமல்ல, வேறெந்த நோயும் அணுகாது: அம்மைகுத்தாமல் ஒரு பிள்ளை மாத்திரம் இறந்துபோவது பெரிதல்ல. அந்தப் பிள்ளைக்கு வைசூரிவரும்போது ஊர்முழுதும் பரவி ஆயிரக்கணக்காய்ப் பிள்ளைகள் மாண்டுபோவார்கள். ஆதலால் அம்மைகுத்தாதவர்களைத் தண்டிப்பது நியாயமே. அவர்கள் சொல்லுவதெல்லாம் வீண் ஆக்ஷேபம் என்பதற்கு ஐயமில்லை. வீண்வாதஞ் செய்வது நமக்குள்ள துர்க்குணங்களில் ஒன்று. அதை முளையிலேயே நிவிர்த்திசெய்ய முயலவேண்டும். முற்றின பருவத்தில் பரிகரிப்பது அருமை.

தசைகளின் உறுப்பும் உபயோகமும்.

யாவரும் உயிரோடு இருக்கும்போது நோய் நிமிர்ந்துநிற்பது வெகு எளிதாக இருக்கிறது. உயிர்போன உடலை ஒரு நிமிஷமாகிலும் நோய் நிற்கவைக்கக்கூடவில்லை. இதனால் நமது தேகத்திற்குள் இருக்கிற யாதோ ஒரு ஜீவசத்தியாலேதான் நாம் நிற்கக்கூடுகிறதென்று நமக்கு நன்றாய்த் தெரிகின்றதல்லவா? அந்த ஜீவசத்தி நமது தேஹத்தின் தசைகளிலிருக்கின்றது. நமது தேஹத்தில் தசைகளிராவிட்டால் நாம் நிற்கவாவது, நடக்கவாவது, கைகால்முதலிய உறுப்புகளை நமது இஷ்டப்படி அசைக்கவாவது கூடாது. தசைகளெல்லாம் எலும்புகளோடு ஒட்டிக்கொண்டிருக்கின்றன.

ஒரு ஜீவஜந்துவின் தசையான மாமிசகண்டத்தைப் பார்த்தால் சிறுசிறு சிவந்த நார்களும் ஜவ்வும் ஒன்றாய்ச் சேர்ந்து தசையாயிருப்பது நமக்கு நன்றாய்த் தெரியவரும். ஆட்டின் கால் கணுவைப்பார்த்தால் தசையின் இயற்கையான உருவம் நன்றாய்த் தெரியும். மத்தியில் தடித்து நுனியில் குறுகிய பல மெல்லிய தசைநார்கள் ஒன்றாய்க் கூடித்தான் அப்படியாகின்றது. அந்தக் கணுவுக்கு இருபக்கத்திலுமிருக்கிற இரண்டு எலும்புகளோடு அதன் நுனிகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன.

இவ்வகையான தசைநார்கள் இஷ்டப்படி சுருங்கத்தக்க சத்தியுடையவைகளாயிருக்கின்றன. இப்போது கையை மடக்கி வாயண்டைகொண்டுபோகவேண்டுமென்று நமக்கு விருப்பமுண்டானால், அந்த விருப்பம் உடனே மூளையிலிருந்து தோளுக்கும் நுனிக்கைக்கும் நடுவில் தோள்பூட்டுக்குக் கீழேயிருக்கிற கைத்த

சையினிடத்திற்கு வருகின்றது. கை நீண்டிருக்கும்போது இந்தத் தசை பனிரண்டு அங்குலம் நீளமுள்ளதாயிருக்கும். கையை வுணக்கும்படி நாம் கருதியவுடனே அந்தத் தசை நான்கு அங்குலம் சுருங்கி அதனால் தோள்பூட்டும் மடிவதனால் கையை வாயண்டைகொண்டுபோகச் சுலபமாகின்றது. ஒரு மனிததேகத்தில் சுமார் நானூறு தசைகளுண்டு. தசைகள் நமது தேகத்தின் எல்லாப் பகுதிகளையும் நன்றாய்க் கவர்ந்து உறுதியாய்க் கட்டிக்கொண்டிருக்கின்றன. அவை மிகவும் உறுதிப்பட்டுச் சுருங்குகிற தன்மையுள்ளவைகளாயிருப்பதால், சரீரத்தின் உறுப்புகள் வேண்டியபடி ஆடவும், மறுபடியும் தன்னிலையில்வந்து நிற்கவும், வல்லமையுடையவைகளாயிருக்கின்றன. பல தசைகளும் சேர்ந்து ஒன்றுக்கொன்று வலிமைகுறையாமல் சரியாய்ப் பலப்பட்டு நெருங்குவதனாலேதான் நாம் நிமிர்ந்து நிற்கக்கூடுகிறது.

தசைகளுக்கு இவ்வாறு சுருங்கும்படியான வல்லமை எதனால் உண்டாகின்றது என்று கேட்கிறீர்களோ? அது நமக்குத் தெரியாது. தசைகள் முழுதும் நரம்புகளும் ரத்தநாடிகளுமாய் நிறைந்திருக்கின்றனவென்பதுமாத்திரம் நன்றாய்த் தெரியும். அவைகளிலே இந்தச் சத்தி தங்கியிருப்பதாய்த் தெரியவருகிறது.

நார்போன்ற ஒருவகைப் பொருளும் தண்ணீருந்தான் தசையுண்டாவதற்கு முதற்காரணம். அந்த நார்களே தசைநார் என்னப்படும். மற்ற உறுப்புகளைவிடத் தசைகளில் ரத்தநாடிகளும் நரம்புகளும் அதிகமாயிருக்கின்றன. தசைக்கு முதற்காரணமான தசைநார் வெண்கருபோலவே இருக்கும். அது சாம்பல்நிறமுள்ளதாயும், உறுதியாயும், *ஸ்திதஸ்தாபககுணமுள்ளதாயுமிருக்கிறது. ஒரு இறைச்சித்துண்டிலிருக்கிற ரத்தமெல்லாம் சுண்டிப்போன பிறகு பார்த்தால் அது நன்றாய்த் தெரியவரும். நல்லவயதுள்ள புருஷன் சரீரத்தில் தசை சுமார் அறுபத்தெட்டுபவுண்டு நிறையுள்ளதாயிருக்கும்.

* ஸ்திதஸ்தாபககுணம்.—நாம் எவ்வளவு இழுத்துப் பிரித்துவிட்டாலும் மறுபடியும் தன்னிலையில்போய் நிற்கத்தக்க குணம். இது சாதாரணமாய் ஓலைப்பாய் ரப்பர்முதலியவைகளில் இருக்கின்றது.

ஆபரணமிழத்தல்

சிறந்த பல ஆபரணங்களும் அவைபோன்ற வேறு பலவிலையில்லாப் பொருள்களும், முதலில் காணாமல்போனதாகவும், அவற்றுள் சில, சிலநாளைக்குப்பின் யாவரும் ஆச்சரியப்படத்தக்க வழியாய் அகப்பட்டதாகவும், சில ஒருநாளும் அகப்படாமலே போய்விட்டதாகவும் பலவித விநோதக்கதைகள் சொல்வதுண்டு. நமது புத்தகத்தைப் படிப்பவர்களுடைய மனவெழுச்சிக்காக அவற்றுள் சில கதைகளை மாதம் ஒவ்வொன்றாகச் சுருக்கியெழுதுகிறோம்.

வெகுநாளைக்குமுன் ஒருதேசத்தில் கனவான் ஒருவன் இருந்தான். அவன் அத்தேசமெங்கும் மிகவும் பெருமைபெற்றவன். அவன் நாள்தோறும் நகரத்துக்கு வெளியே தனிப்புறமாயிருக்கும் தனது சிங்காரத்தோட்டத்திற்குச் சென்று, அங்கேயே தன் நேசர்களோடு விநோதமாய்ப் பகற்போசனம் புசித்து, சிறிதுநேரம் உல்லாசமாய் இருந்து பின்பு வீட்டுக்கு வருவது வழக்கம். அவன் வெளியில் எங்கேபோனாலும் தன் கலியாணகாலத்தில் தனக்குச் சிறப்பாய் அளித்த சிறந்த ஒரு பட்டாடையை மேலே போர்த்துக்கொண்டேபோவான். ஒவ்வொருகாலங்களில் வெயில் உக்கிரமாயிருந்தால், வேர்வைபட்டு அழுக்காய்விடும் என்று பட்டாடையைப் போர்த்துக்கொள்ளாமல் அழகாய்க் கையில் எடுத்துக்கொண்டுபோவதுமுண்டு.

ஒருநாள் சிங்காரவனத்துக்குப் புறப்படும்போது வெகு தாபமாயிருந்ததனால், அந்த கணவான் பட்டாடையை மேலே போர்த்துக்கொள்ளாமலேபோயினான். அங்கே போய்க் கொஞ்சநேரம் உல்லாசமாய் உலாத்திப் பிறகு விநோதமாய் விருந்துண்டு உட்காந்திருக்கையில் அவன், தன் வேலைக்காரனைக் கூவி, என் பட்டாடை எங்கே? எடுத்துக்கொண்டு ஓடிவா என்று சொல்ல, அது கேட்டு அந்த வேலைக்காரன்: அதென்ன, பட்டாடையென்று கேட்கிறீர்களே; எனக்கு என்னதெரியும் என்றான். அவன் மறுபடியும், நீ நான் போர்த்துக்கொள்ளுகிற பட்டாடையை அறியமாட்டாயா? நான் போஜனம் பண்ணவிடத்திலேயோ, தோட்டத்தில் நான் உட்காந்திருந்த மரத்தின் அடிவாரத்திலேயோ எங்கே வைத்தேனோ பார்த்து எடுத்துக்கொண்டுவாவென்றான். வேலைக்காரன் முழுதும் தேடிப்பார்த்துவிட்டுவந்து, அது எங்கும் காணப்படவில்லையென்று சொன்னான். அதுகேட்டு எஜமானன்: காணாமல் எங்கே ஓடிப்போம்; ஒருவேளை மறந்துபோய் வண்டியிலேயே வைத்துவிட்டு வந்திருப்பேன்; வண்டிக்காரன் பார்த்து எடுத்துவைப்பான் என்று சொல்லி அதைக் கவனியாமலே கொஞ்சநேரம் தோழர்க

ளோடு விளையாடி மாலைப்பொழுதானபின்பு தோட்டத்திலுள்ள பல சிங்காரக்காட்சிகளைக் கண்குளிரச் சுற்றிப்பார்த்துக்கொண்டிருந்தான்.

இந்த அதிசயத்தைப்பாருங்கள்: வண்டிக்காரன் வண்டியை ஓட்டிக்கொண்டு இருப்பிடம்போய்ச் சேர்ந்தான். அப்போது அந்தப் பட்டாடை உடனே வேண்டுமென்கிற அவசரமில்லாமையால் உடனே ஓடி வண்டியில் தேடிப்பார்ப்பதற்கு இடமில்லாமற்போயிற்று. வண்டிக்காரனண்டை பட்டாடையிருக்குமென்று எஜமானன் தைரியமாயிருந்தான். அந்தப் பட்டாடையை வண்டிக்காரன் அறியவே அறியான். மேலும் அதிகாரி வண்டியை விட்டு இறங்கினவுடன் அதைப் பரிசோதிக்கவேண்டிய நிமித்தம் ஒன்றுமில்லாமையால் வண்டியின் உட்புறத்தை அவன் ஆராய்ந்து பார்க்கவுமில்லை. பார்த்தால்தான் என்ன? வண்டியில் வைத்திருந்தாலல்லவோ அகப்படும். அந்த வண்டிக்காரனும் வேலைக்காரனும் நெடுநாளாய் அந்த எஜமானனிடத்திலேயே ஊழியஞ்செய்துகொண்டிருப்பவர்கள். இதுவரையில் வெகு பிராமாணிகர்களாய் நடந்துவந்தார்கள். ஆதலால் அவர்களிடத்தில் எஜமானன் யாதொரு சந்தேகமுங்கொள்வதற்கும் இடமில்லை.

அந்த கனவான் உத்தியானவனத்தில் உல்லாஸமாய் உலாத்திக்கொண்டிருக்கையில், வீட்டுக்குப் போகவேண்டிய வேளையாகவே, தோட்டத்து வாயிலண்டை வண்டி வந்துநின்றது. அதைப் பார்த்து வேலைக்காரன் வண்டியண்டையோடி வண்டிக்காரனைப் பார்த்து: நம்முடைய அதிகாரி வண்டியில் பட்டாடையை வைத்து மறந்துவந்தாராம்; நீ பார்த்து எடுத்துவைத்திருந்தால் வாங்கிவரச் சொன்னார் என்று சொல்லவே, அவன் திடுக்கிட்டு: நான் ஒன்றும் அறியேனே என்றுசொல்லி வண்டிமுழுதுந்தேடினான்; அது அகப்படவில்லை. அதுதெரிந்து எஜமானன், வீட்டைவிட்டுப் புறப்படும்போது, நினைவில்லாமல் வீட்டிலேயே வைத்துவிட்டு வந்திருக்கலாமென்று எண்ணி வீட்டுக்குப்போய் அங்கே ஓரிடந்தப்பாமல் பலபேர்களோடுகூடிச் சுற்றிச்சுற்றிப்பார்த்தும் அகப்படாமையால், யாரோ திருடிக்கொண்டுபோயிருக்கவேண்டுமென்று நினைத்து, அதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்க்கு நூறுரூபாய் இனாங்கொடுப்பதாய்ச் சமாசாரபத்திரிகைகளில் பிரசித்தப்படுத்தினான்.

அதை எவனாவது கண்டுபிடித்துக்கொண்டுவருவானோவென்று இரண்டொரு வாரம்வரையில் எதிர்பார்த்திருந்தான். அதைப்பற்றி ஒரு செய்தியும் அகப்படவில்லை. அது உண்மையாய்த் திருடுபோனதுதான் என்று நிச்சயப்பட்டுப்போகவே அதன்மேலிருந்த விருப்பத்தினால் எப்படியாவது அதன் வரலாற்றை அறியவேண்டுமென்று ஆவல்கொண்டு, அதைக் கொண்டுவந்து கொடுப்பவர்க்கு நூற்றைம்பதுரூபாய் இனாங்கொடுப்பதாகப் புதிதாய் ஒரு விளம்

பாஞ்செய்தான். அதுவும் முன்செய்த விளம்பரம்போலவே வீணு ய்விட்டது. பெரிய ஆசைகாட்டித் திருடர்களை வெளிக்கு இழுக் கமுயலுவது நல்ல சாதுரியமான காரியந்தான். ஆயினும் அதன் மேல் ஆசைகொண்டு திருடன் வெளியேவருவானுனல், அவ்ன் திருட்டுத்தனம் இரட்டிக்குமல்லவா?

இப்படியே பலவாரங்கள் கழிந்தன; பலமாதங்கள் கழிந்தன; பல ஆண்டுகள் கழிந்தன; அவன் பட்டாடையை மறுபடியும் கண்ணுல் காணவில்லை. வெகுநாள்வரையில் அந்த ஆசைமாத்தி ரம் அவனைவிட்டு நீங்கவேயில்லை. எத்தனைகாலந்தான் வீணுசைப் பட்டுக்கொண்டிருக்கலாம்? கடைசியில் நிராசையாய் ஒழித்துவிட் டான். அந்தப் பட்டாடை எங்கேபோயிற்ருே, எவன் திரு டிக்கொண்டுபோனுனே கடவுளுக்குத்தான் தெரியவேண்டும்!

சிறுவர்க்கான கதை.

ஆறு அன்னப்பறவைகள்.

பூர்வகாலத்தில் ஒரு தேசத்தில் ஒரு ராஜா ராஜ்யபாலனஞ் செய்துகொண்டிருந்தான். வேட்டையாடுவதில் இருந்த பேராவலி ஞல் அவன் ஒருநாள், தன்னுடன் வந்த பரிஜனங்களைக்கூடப் பாராமல், தனியே வேட்டையாடிக்கொண்டுபோனுன். போய்க் கொண்டிருக்கையில் பொழுதுபோய்விடவே, அவ்வரசன் நாலு பக்கமும் சுற்றிப்பார்த்தான். ஒருவருமில்லாமல் தான்மாத்திரம் தனியே நடுக்காட்டில் அகப்பட்டுக்கொண்டது கண்டு, அக்காட் டைவிட்டு வெளியேபோக வழிதேடினுன். எந்தப் பக்கத்திலும் வழியகப்படவில்லை. இப்படி நடுக்காட்டில் அல்லாடித் தவிக்கை யில், தலைநடுங்கக் கைகால் தள்ளாட ஒரு கிழப்பெண்பிள்ளை அவ்வழியே வரக்கண்டான். அவள் ஒரு சூனியக்காரி.

அவளண்டைபோய், அரசன்: அம்மா! இக்காட்டினின்றும் வெ ளியேபோக எனக்கு ஒரு வழிகாட்டி என்னைக் காப்பாற்றவேண் டும் என்ருன். அவள்: அப்படியே காட்டுகிறேன்; ஆனுல் நீர் எனக்கு ஒரு காரியஞ்செய்யவேண்டும்; எனக்கு ஒரு மகள் இருக்கிருள்; அவளைப்போல் அழகுள்ள பெண்ணை நீர் எங்கும் கண்டிருக்கமாட்டீர்; அவளைக் கலியாணஞ்செய்வதாய் வாக்குத் தத்தஞ்செய்தால்தான் உமக்கு வழிகாட்டுவேன்; இல்லாவிட் டால் வெளியேபோக வழியகப்படாமல் நீர் இங்கேயே பசியால் வருந்திச் சாகவேண்டுவதுதான் என்று சொன்னுள். அரசன், எப்படியானுலும் ஆகட்டும்; வழியகப்பட்டால் போதுமென்று நிச்சயித்து அவள் சொன்னபடியே அங்கீகரித்தான்.

தான் சொன்னதை அவன் சம்மதிக்கவே, அந்தக் கிழவி அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனாள். அங்கே நெருப்பண்டை குளிர்காய்ந்துகொண்டிருந்த அவள் மகள், நெடுநாளாய் அவன் வரவை எதிர்பார்த்திருந்தவள்போல் அவனைக் கண்டவுடனே எதிர்கொண்டுவந்து அழைத்துக்கொண்டுபோய் உபசரித்தாள். அப்பெண்ணின் அழகைப் பார்க்கவே அரசன் ஆச்சரியப்பட்டு, அவளைத் தன் குதிரைமேலேற்றி வைத்துக்கொண்டான். உடனே அந்தக் கிழவி வழிகாட்டவே, அரசன் திரும்பித் தன் அரண்மனைபோய்ச் சேர்ந்து வெகு சம்பிரமமாய் அவளைக் கலியாணஞ்செய்துகொண்டான்.

அந்த ராஜாவுக்கு மூத்தமனையாளிடத்தில் ஏழுமக்கள் பிறந்திருந்தார்கள். அவர்களுள் ஆறுபேர் ஆண்பிள்ளைகள்; ஒருத்தி பெண்பிள்ளை. அவ்வரசனுக்கு அம்மக்களிடத்திலிருந்த அன்பு வேறெங்குமில்லை. அதனால் அவன்: அந்தக் குழந்தைகளை மாற்றாந்தாயார் ஆதரவாய்ப் போஷிக்கமாட்டாள்; ஒருவேளை அவர்களுக்குத் தீங்குநினைத்தாலும் நினைப்பாள் என்று அவர்களை அங்கே விட்டுவைக்க மனமில்லாமல், ஒரு பெருங்காட்டு நடுவே ஒருவருக்குந் தெரியாமலிருந்த ஒரு மாளிகையில் கொண்டுபோய்வைத்தான். அவ்விடத்திற்குப்போக வழி ஒருவருக்குந்தெரியாது. முன் அந்தச் சூனியப்பெண் கொடுத்த மந்திரநூலுண்டை ஒன்று தன்னிடத்திலிராவிட்டால் அவ்வழி அவனுக்குக்கூடத் தெரியாதுதான். அந்த நூலுண்டையைக் கீழேபோட்டவுடனே, அது தானே பிரிந்துகொண்டு அவனுக்கு வழிகாட்டிக்கொண்டிருந்தது. அவன் நிமிஷங்கூட வீட்டில் நிற்காமலே அடிக்கடி தன் மக்களண்டைபோய்விடவே, அவன் மனையாள் இதென்ன? இவர் ஒருபோதும் வீட்டில் நிற்கிறதில்லையே, எங்கேபோகிறாரோ கண்டறியவேண்டுமென்று பேராவல்கொண்டு, ராஜாவினுடைய அந்தரங்கச் சேவகர்களை அழைத்து அவர்களுக்கு அளவற்ற பொருள்கொடுத்து: நமது மகாராஜா அடிக்கடி தனியே எங்கேபோகிறாரென்று கேட்டாள். அவர்கள் அந்த ரகசியத்தை வெளியிட்டதுமன்றி, நூலுண்டைதான் அதற்கு வழியென்பதையும் அறிவித்தார்கள். அதைக் கேட்கவே, அந்த நூலுண்டையைக் கண்டுபிடிக்கிறவரையில், அவளுக்கு மனது ஒரு நிமிஷங்கூட ஒரு இருப்பிலிருக்கவில்லை. அந்த நூலுண்டை அகப்பட்டபின்பு அவள், தன் தாயிடத்திலிருந்து சூதுகற்றவளாதலால், வெண்பட்டினால் மந்திரக்கச்சைகள் தைத்து எடுத்துக்கொண்டு, ஒருநாள் தன் புருஷன் வேட்டைமார்க்கமாய்ப் போயிருக்கிற தருணம்பார்த்து, அந்த நூலுண்டை காட்டினவழியே காட்டுக்குப் புறப்பட்டுப்போனாள்.

அங்கே விளையாடிக்கொண்டிருந்த ஆறுபிள்ளைகளும் வெகு தூரத்தில் இவள் வருவதைக்கண்டு, தங்கள் அருமைத் தந்தைதான்

வருகிறார் என்று கோலாகலமாய் ஓடிவந்தார்கள். கிட்ட நெருங்கி வந்தவுடன், அந்த ராணி தான் கொண்டுவந்த சட்டைகளை ஆறுக் கொன்றாகப் போட்டாள். அது மேலேபட்டவுடனே அந்த ஆறு பேரும் அன்னப்பறவைகளாக மாறி அந்தக் காட்டின் நடுவே பற ந்து ஓடிப்போனார்கள். அவளும் தான் தன் சக்களத்தி மக்களையெல் லாம் ஓட்டிவிட்டதாய் நினைத்து மனம்பூரித்து வீடுபோய்ச்சேர்ந் தாள். ஆனால் ஒரு சிறு பெண்மாத்திரம் தன் சகோதரர்களோடு வெளியேவாராமையால் இந்த ராணியால் ஓட்டப்படவில்லை. அப் பெண் இருக்கிற செய்தி அந்த ராணிக்கும் தெரியாது.

மறுநாள் அரசன் தன் குழந்தைகளைப் பார்க்கச் சந்தோஷமாய் வருகையில் அந்தச் சிறுபெண் தவிர மற்றொருவரும் அவன் கண் ணில் தென்படாமையால் அந்தப் பெண்ணைக்கண்டு, உன் சகோத ரர்கள் எங்கே? என்று கேட்டான். அதற்கு அவள்: என் அருமைத் தந்தையே! அவர்கள் எல்லாரும் என்னைத் தனியே விட்டுவிட்டு வெளியே விளையாடப்போனார்கள். நான் பலகணிவாயிலின் வழி யாய்ப் பார்த்துக்கொண்டிருக்கையில், கொஞ்சநேரத்துக்கெல்லாம் அவர்கள் அன்னப்பக்ஷியாக மாறி ஆகாயமார்க்கமாய்ப் பறந்தோ டிப்போனார்கள். இதோ கீழே உதிர்ந்த இறகுகளைக்கூடப் பாருங் கள் என்று தான் கண்டதையெல்லாம் சொன்னாள்.

அதைக்கேட்கவே அரசனுக்கு மிகவும் துக்கமுண்டாயிற்று. ஆயினும் இந்தத் தீச்செயல் தன் ராணிசெய்திருப்பாள் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. இந்த ஒரு பெண்ணைக்கூட மறுபடியும் யாராவது வந்து மோசஞ்செய்யப்போகிறார்களே என்று அவளைத் தன்னுடன் வரும்படி வேண்டினான். அந்தப் பெண் தன் மாற்றாந்தாயாருக்குப் பயந்து இன்றையதினம்மாத்தி ரம் இங்கேயே இருந்து நாளையதினம் வருகிறேன் என்றாள். அங்கே ஒரு நிமிஷங்கூட அப்பெண்ணுக்கு இருக்கப் பிடிக்க வில்லை. எப்படியாவது தன் சகோதரர்களைப் போய்க் கண்டுபிடிக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தாள்.

அன்றையதினம் பொழுதுபட்டவுடன் அந்தச் சிறுபெண் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு அக்காட்டிலே நுழைந்து எங்கும் நிற்காமல் போய்க்கொண்டே இருந்தாள். மறுநாள் சாயங்காலம் வரையில் ஓயாமல் நடக்கவே, அவள் மிகவும் அயர்ந்துபோய் அங்கே சமீபத்தில் தென்பட்ட ஒரு சிறுவீட்டில் நுழைந்தாள். அந்த வீட்டுக்குள் ஒரு அறையில் ஆறு கட்டில்கள்போட்டிருந் தன. அவள் அவையொன்றிலும் படுக்கத்துணியாமல் அவைக ளின்கீழே தரையில் போய்ப்படுத்து அன்று ராத்திரியை அங் கேயே கழிக்கும்படி எண்ணங்கொண்டிருந்தாள்.

அவள் அங்கேபோய்ப் படுத்த கொஞ்சநேரத்துக்கெல்லாம் ஆறு அன்னப்பறவை பலகணிவாயிலின் வழியாய் உள்ளே பறந்

துவந்து உட்காந்து, ஒன்றேடொன்று சிறகடித்துக்கொண்டு இறகுகளையெல்லாம் உதிர்த்து அன்னப்போர்வையை வாங்கி ராஜகுமாரர்களாயின. அந்தப்பெண் அவர்களை நிதானித்துப்பார்த்துத் தன் சகோதரர்களென்று அறிந்துகொண்டு ஆநந்தம் பூரித்து மெல்ல மெல்ல வெளியேவந்தாள். இவளைப்பார்க்கவே அவர்களும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆயினும் அவர்களுடைய சந்தோஷம் நெடு நேரமிருக்கவில்லை. அவர்கள் அப்பெண்ணைப்பார்த்து, நீ இங்கே நிற்கக்கூடாது, இது திருடர்களின் வீடு; அவர்கள் உன்னைக் கண்டார்களானால் உடனே கொன்றுபோடுவார்கள்; இது அவர்கள் வருகிறசமயந்தான் என்று சொன்னார்கள். அவர்களுடைய உடன் பிறந்தாள் அந்த வார்த்தையைக்கேட்டு நீங்கள் என்னைக் காக்கமாட்டீர்களா? என்று வருந்திக்கேட்க, அதற்கு அவர்கள்: அது மாளாது; நாங்கள் தினந்தோறும் மாலையில் அரைநாழிகைதான் அன்னப்போர்வையைவாங்கி வாஸ்தவ ரூபத்தோடு இருப்போம்; மறுபடி ஹம்ஸங்களாகிவிடுவோம் என்று சொல்லவே, மறுபடியும் அந்தப் பெண்: உங்களுக்கு இந்தச் சாபம் விடுதலையாகமாட்டாதா? என்று கேட்டாள், அதற்கு அவர்கள்: விடுதலையாகமாட்டாது; அதற்கு இருக்கிற ஏற்பாடுகள் மிகவும் அசாத்தியமானது, ஆறுவருடகாலம் நீ பேசாமலும் சிரியாமலும் இருந்து, எங்களுக்காக ஆறு விநோதமான அங்கி தைக்கவேண்டும்; நீ தைத்துக்கொண்டிருக்கையில், யாரோடாயினும் ஒரு பேச்சு பேசுவையானால் நீ அவ்வளவுகாலஞ் செய்த காரியமெல்லாம் வீணாய்ப்போம்;—என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அரைநாழிகையாய்விடவே, அவர்களெல்லாம் அன்னமாய்ப்போய்ப் பறந்துபோனார்கள்.

தன் சகோதரர்கள் போய்விடவே அவள் விசனமடைந்து தன் உயிர்போனாலும் போகட்டும்; அவர்களை விடுவிக்கிறதே காரியம் என்று தீர்மானம்பண்ணி, அந்த வீட்டைவிட்டு வெளியே காட்டிற் சென்று ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டு, அன்று இரவெல்லாம் அங்கேயே கழித்துவிட்டு மறுநாள் காலையில் எழுந்து காட்டில் திரிந்து கச்சைதைக்கவேண்டிய நார்முதலியவைகளையெல்லாம் சேகரித்துக்கொண்டு, இனி ஒருவரோடும் பேசவும் சிரிக்கவும் கூடாதென்று சபதஞ்செய்துகொண்டு அங்கேயே இருந்து கச்சை தைக்கத்தொடங்கினாள்.

அப்படியே சிலநாள் சென்றன. இப்படியிருக்கையில், ஒரு நாள் அந்தத் தேசத்து ராஜா வேட்டையாடிக்கொண்டுவருகையில், அவன் வேட்டைக்காரர்கள் அம்மரத்தண்டைவந்து அவளைப் பார்த்துக் கூவி: நீ யார்? என்று கேட்டார்கள். அவள் வாயையே திறக்கவில்லை. அதைப்பார்த்து அவர்கள், அவள் பயந்துபோனதாய் நினைத்து, நீ கீழே இறங்கிவா; நாங்கள் உனக்கு யாதொரு தீங்கும் செய்யவில்லை என்று வேண்ட, அதற்கும் அவள் பேசா

மலே தலையசைக்கினாள். அவர்கள் தன்னைவிடாமல் அடிக்கடி செய்திகேட்கவே, எப்படியாவது அவர்கள் போய்விட்டால் போதுமென்று அந்தச் சிறுபெண் தன்னுடைய கண்டசீரத்தைக் கழற்றிப்போட்டாள். மறுபடியும் அவர்கள் தொந்தரைசெய்யத் தொடங்கினார்கள். அதன்மேல் தன் கடகத்தைக் கழற்றி எறிந்து பார்த்தாள்; அதுவும் பயன்படவில்லை. தன்னிடத்திலிருக்கிற பொருள்கள் எல்லாவற்றையும் இப்படியே ஒவ்வொன்றாகப் போட்டுப்பார்த்தாள். அவள் எதைத்தான் போட்டாலென்ன? அவர்கள் பொருளை நாடிவந்தவர்களல்லவே. தாங்கள் எவ்வளவு வேண்டி அழைத்தும் அவள் வாயைத் திறவாமலிருக்கவே, இதென்ன புதுமையென்று அவர்கள் மரத்தின்மேலேறி அவளைக் கீழே இறக்கித் தங்கள் அரசன் முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

அந்த ராஜா அந்தக் கன்னிகையைப்பார்த்து: நீ யார்? அந்த மரத்தின்மேல் என்னசெய்துகொண்டிருக்கிறாய் என்று கேட்டான். அவள் அதற்கு உத்தரம்சொல்லாமலிருக்கவே அவன் தனக்குத் தெரிந்த பல பாஷைகளாலும் கேட்டான். அப்போதும் அவள் ஊமையாயேயிருந்தாள். ஆயினும் ராஜா அவள் அழகைக் கண்டு அவளிடத்தில் விருப்பங்கொண்டதினால் அவளுக்குத் தன் அங்கியைப்போட்டுக் குதிரைமேலேற்றி வைத்துக்கொண்டு பட்டணம்போய்ச்சேர்ந்து, அவ்வழகிக்காக சிறந்த ஆடை ஆபரணங்களெல்லாம் செய்வித்துக்கொடுத்து, அவளை எப்போதும் தன் அருகிலேயே வைத்து விசேஷமாய் ஆதரித்துக்கொண்டிருந்தான். அவளுடன் பழகப்பழக, அரசன் அவளுடைய நற்குண நன்னடக்கைகளை நன்றாய்க் கண்டறிந்துகொண்டு, அவள்தவிர மற்றெவரையும் தான் கலியாணஞ் செய்துகொள்வதில்லையென்று உறுதிசெய்து சிலநாள் கழிந்தபின் தான் தீர்மானித்தபடியே கலியாணத்தை நிறைவேற்றினான்.

அந்த ராஜாவுக்குத் தாய் ஒருத்தியுண்டு. அவள் மிகவும் கேடுகெட்ட குணமுள்ளவள். ராஜா இந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டது அவளுக்குச் சிறிதும் இஷ்டமில்லை. அதனால் அந்தப் பெண்ணிடத்தில் அடிக்கடி குற்றஞ்சார்த்தத்தலைப்பட்டாள். பெண்வரும்வழியும் பொன்வரும்வழியும் யாருக்குத் தெரியும். இந்த ஊமைப்பெண்ணா நமது குழந்தைக்கு வந்து வாய்த்தது என்று இப்படி பலவிதமாய் அடிக்கடி குற்றஞ்சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

சிலகாலத்திற்குப்பிறகு அந்த ராணிக்கு முதற்குமாரன் பிறந்தான். அதுதெரிந்து அந்தக் கேடுகெட்ட கிழவி அந்தக் குழந்தையைக் கொண்டுபோய் ஒளித்துவிட்டுத் தன் மருமகள் தூங்குகையில் கொஞ்சம் ரத்தத்தை அவள் வாயிலே பூசிவிட்டு, இதை

ன்ன இந்தப் பெண் பெற்றபிள்ளையைப் புசிக்கிறாளே! என்று தன் பிள்ளையண்டை வந்து பழிகூறினாள். அவன் அதைக் காது கொடுத்துக்கேளாமலே, இனி அந்தப் பெண்ணண்டை ஒருவரும் போகவேண்டுவதில்லை என்று கட்டளையிட்டான். அந்த அழகி தான் ஒன்றையும் கவனியாமல் தன் தையலிலேயே கண்ணு யிருந்தாள்.

மறுபடியும் கொஞ்சநாள் கழித்தபிறகு அவளுக்கு இரண்டாங் குமாரன் பிறந்தான். அப்போதும் அந்தக் கிழவி முன்போலவே நடத்திவிட்டு அரசனண்டைபோய்க் குற்றஞ்சொன்னாள். அப்போதும் அரசன் அவள் வார்த்தையை நம்பவில்லை. இந்தப் பெண் மிகவும் பரிசுத்தமானவள்; இத்தன்மையான கொடியசெய்கை இவள் ஒருபோதும் செய்திருக்கமாட்டாள்; அவள் வாயிருந்துபேசினாலன்றோ அவளுடைய நற்குணமெல்லாம் வெளியாகும் என்று சொன்னான். மூன்றாம் பிள்ளை பிறந்தபோதும் அந்தக் கிழவி அப்படியே செய்துவிட்டு அவள்மேல் குற்றங்கூறினாள். அரசன் எவ்வளவுதூரந்தான் அவளைத் தாங்கமாட்டுவான்! இனிமேல் அவனால் மாளவில்லை. அதைப்பற்றி விசாரிக்கும்படி நேரிட்டது. நியாயசபைக்கு அப்பெண்மணியை வரவழைத்து விசாரணைசெய்ததில் அவளை நெருப்பிலே தள்ளி நீறுக்கும்படி தீர்மானமாயிற்று.

அவளுக்குச் சிக்ஷைசெய்யும்படி ஏற்பட்ட நாள்தான் அவள் விரதங்கொண்ட ஆறுவது வருஷத்தின் கடைசிதினம். அன்றைய தினம் அவள் பேசவாவது சிரிக்கவாவது கூடுமா? அவள் தன் அருமைச் சகோதரர்களை விடுவிப்பதற்காக ஆறு அங்கியும் தைத்துமுடித்தாயிற்று; ஆனால் ஒரு அங்கியில் இடதுகைமாத்திரம் குறைவு. தண்டனைசெய்யும்படி தீர்மானமாகவே அவளைச் சிக்ஷை நிறைவேற்றுகிற ஸ்தலத்திற்குக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அப்போதும் அவள் தான் தைத்த அங்கிகள் ஆறையும் கையிலேயே வைத்துக்கொண்டு கழுமரத்திலேறிநின்றாள். எதிரே தீ வெகு உக்கிரமாய்க் கொழுந்துவிட்டு சொலித்துக்கொண்டிருந்தது. அவளொன்றும் வாயைத் திறந்து சொல்லமாட்டாமல் நான்கு பக்கமும் சுற்றிச்சுற்றிப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். இப்படியிருக்கிற சமயத்தில் ஆகாயமார்க்கமாய் ஆறு அன்னப்பறவைகள் பறந்தோடி வந்தன. அவைகளைப் பார்க்கவே தனக்கு விடுதலையாகிறகாலம் வந்துவிட்டதென்று அவள் மனம் சந்தோஷத்தால் பொங்கிப்பூரித்தது.

அந்த ஆறுபறவைகளும் ஆகாயத்தினின்றும் இறங்கி அவள் கைக்கு எட்டும்படியான தூரத்தில்வந்து நின்றன. உடனே அவள் தான் இத்தனைநாளாய் எவ்வளவோ வருத்தங்களை அனுபவித்துத் தைத்த சட்டைகளை அவைகளின்மேல் போட்டாள். இந்தக் சட்டைகள் அப்பக்ஷிகளின்மேல் பட்டதக்ஷணமே அவைகளின்மேலிருந்த அன்னப்போர்வைகளெல்லாம் உதிர்ந்துபோய் அவளு

டைய சகோதரர்களாய் எதிரேவந்து நின்றார்கள். அவர்களெல்லாரும் நல்ல வலிமையும் சாமர்த்தியமும் அழகும் நிறைந்த நல்ல வயது புருஷர்களாயிருந்தார்கள். அவர்களுள் கடைசி பிள்ளைக் குமாத்திரம் இடதுகையில்லாமல் அதற்குப் பதிலாய் அந்தப் பக்கத்தில் பக்ஷிரக்கை உதிராமலே நின்றது.

அவர்களெல்லாரும் தமது தங்கையைக் கட்டி முத்தமிட்டுக் கொண்டார்கள். அதன்பின்பு அந்த ராணி அரசனைநோக்கி: என் அருமைப் பிராணநாதரே! இனி நான் உம்முடன் பேச யாதொரு தடையுமில்லை; நான் ஒன்றுமறியாமல் நிரபராதியாயிருந்தும் வீணாய்ப் பழிக்காளானேன்; அந்தக் கிழவி என் மூன்று பிள்ளைகளையும் கொண்டுபோய் மறைத்துவிட்டு என்மேல் வீண்குற்றஞ்சாத்தினாள் என்று எல்லாச் செய்திகளையும் உள்ளபடியே சொன்னாள்.

அதைக்கேட்டு அரசன் அந்தக் கிழவியை அழைத்து விசாரிக்க, அவள் தான் இத்தனைநாளாய் மறைத்துவைத்த குழந்தைகளையெல்லாம் கொண்டுவந்து கொடுத்தாள். அரசன் அவர்களைச் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு, அந்தக் கிழவிசெய்த பெரும்பிழைக்காக அவளைக் கழுமரத்திலேற்றி தீயில்தள்ளி எரித்துச் சாம்பலாக்கிவிட்டு, தன் அருமைநாயகியோடும் அவள் சகோதரர்களோடும் தன் மக்களோடும் சுகமாக நெடுநாள் வாழ்ந்துகொண்டிருந்தான்.

சமாசாரம்.

சுதேசரை ஸிவில் உத்தியோக வகுப்பில் சேர்த்துக்கொள்ளுதல்.—இந்திய ராஜப்பிரதிநிதியாகிய விற்றன் பிரபு கல்கத்தா சர்வகலாசபையின் வருஷோற்சவ காலத்தில் செய்த உபந்நியாசத்தில் சுதேசரை பெரிய ஸிவில் உத்தியோக வகுப்புகளில் சேர்த்துக்கொள்வதைப்பற்றி அடியிற்கண்ட மொழிகளைச்சொன்னார்:—

இத்தேசத்தில் ஐரோப்பியர்மாத்திரம் நிர்வகிக்கத்தக்க சர்க்கார் உத்தியோக பதவிகள் சில உண்டு. இதற்கு வழக்கில்லை. ஆனாலும், சர்க்காருக்கு அநுகூலமாகவும், தமது பெயருக்குப் புகழ்ச்சியாகவும் சுதேசிகள் நிர்வகிக்கத்தக்க உத்தியோகங்களும் அநேகம் உண்டென்று மனநேர்மையும் சாமர்த்தியமுமுள்ள யாவருக்கும் தோன்றவேண்டும்; பிறர் அபிப்பிராயம் எப்படியிருப்பினும் நமது அபிப்பிராயம் இதே. ஆனதுபற்றி, இத்தாற்பரியத்தை நமது திருஷ்டியில் வைத்துக்கொண்டு, இதற்கு ஒப்ப நாம் முதல்முதல் சர்க்கார் உத்தியோகங்களுக்கு நூதன தரக்கிரமம் ஏற்படுத்தவேண்டும். தேசக்ஷேமத்திற்கும் பிரஜாவிர்த்திக்கும் அநுகூலமாக ஐரோப்பியரால்மாத்திரம் நிரந்தரமாய் நிர்வகித்துவரவேண்டிய பிரதான அரசாட்சி உத்தியோகங்கள் இன்னின்னவென்று தீர்க்கமும் உறுதியுமாய் வரையறை செய்யவேண்டும். மற்ற உத்தியோக பதவிகள் பலவாய் உண்டு. அவைகள் கௌரவத்தில் குறைந்தவைகளல்ல, பிரதானம் குன்றியவைகளுமல்ல. அவைகளில் எவ்வெவ்வுத்தியோகங்களைத் தடையற நிறைவேற்றும் சாமர்த்தியம் சுதேசருக்கு இருக்கின்றதோ, அவ்வுத்தியோகங்களைச் சுதேசர் தப்பாமல் எளிதிற்பெறத்தக்க வழி திறக்கவேண்டும்.

Printed at the C. K. S. Press.

PRINCIPAL ENTRANCE TO THE PAGODA OF JUGGERNATH.

ஜகந்நாதம்.